37 கோடியே 2 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. தொடராச் செலவினம் என்பது இயந்திரங்கள் 8 இலட்சம் ரூபாய் அளவிற்கு வாங்க வேண்டும்; கணினிகள் வாங்க வேண்டும்; அறைகலன்கள் வாங்க வேண்டும்; நூலகத்திற்கான புத்தகங்கள் வாங்கவேண்டும்; கட்டடங்கள் கட்டிட வேண்டும். ஆக, ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்றால், அரசுக்குச் செலவினமாக 56 கோடியே 94 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. கிராமப்புறமாக இருந்தால், கூடுதலாக ஐந்து ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அந்தவகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இதுவரையில் இல்லாத அளவிற்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் 11 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, மாணவர் சேர்க்கை தற்போது நடைபெற்று வருகிறது. அந்தவகையில், நீங்கள் இருக்கிற உங்களுடைய பகுதியில், இந்தத் தேவைகளெல்லாம் நிறைவேறுகிற காலகட்டத்தில், அரசு அதைப் பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

7—

நியாய விலைக் கடை கட்டடம்

***57887**—**திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், இனாம்ரெட்டியபட்டி ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 ஜனவரி 21]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், இனாம்ரெட்டியபட்டி தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்படும் இனாம்ரெட்டியபட்டி நியாய விலைக் கடை, 620 குடும்ப அட்டைகளுடன் முழுநேர நியாய விலைக் கடையாக 2001 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 210 கூட்டுறவு மருந்தகங்கள் மற்றும் 106 அம்மா மருந்தகங்கள் மூலமாக உயிர் காக்கும் மருந்துகளைத் தரமான விலையில் விற்பனை செய்து வருவதோடு மட்டுமல்லாமல், 100 கோடி ரூபாய் விலை நிலைப்படுத்தும் நிதியத்தை உருவாக்கி 58 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலமாக காய்கறிகளையும், சந்தைக் குறுக்கீட்டுத் திட்டத்தின்மூலம்–*Marketing intervention *மூலமாக பருப்பு, நல்லெண்ணெய், மிளகாய், புளி ஆகியவற்றின் விலையினையும் கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கட்டுக்குள் வைத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கண் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

'Public Distribution System–*பொது விநியோகத் திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது என்று' மத்திய அரசின் உயர் அமைச்சர் பாராட்டியுள்ளார். அதைவிட 'திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' என்பதற்கிணங்க, சென்ற வாரம் தமிழகத்திற்கு வந்த ஐக்கிய நாடுகள் சபையின் –* UNESCO–*வின் தலைசிறந்த, உலகத்திலேயே தலைசிறந்த நிபுணர்* Bob Reed *அவர்கள்,* Water, Sanitation and Hygiene *என்ற வார்த்தைக்கே* WASH *என்று பெயர் வைத்த அந்த நிபுணர், வெள்ளம் வந்தபோது, பண்ணைப் பசுமைக் கடைகளை உபயோகித்து எப்படி தமிழக அரசு விலையைக்*

கட்டுப்படுத்தியிருக்கிறது என்று பேசியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—45

கத்ரினா புயல் வந்தபோது, 9 மாதங்களுக்கு அமெரிக்க நாட்டினரால் recover ஆக முடியவில்லை. ஆனால், தமிழ்நாடு ஒன்பதே நாட்களில் வெள்ளத்தின் தாக்கத்திலிருந்து இயல்பு நிலைக்குத் திரும்பியிருக்கிறது என்று Bob Reed அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பண்ணைப் பசுமைக் கடைகளையும், மற்றுமுள்ள அனைத்து வலிமைகளையும் பயன்படுத்தி அரசு பொது விநியோகக் கட்டமைப்பு, இந்த சாதனை சாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

இனாம்ரெட்டியபட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் நியாய விலைக் கடையில் 894 குடும்ப அட்டைகள் உள்ளன. அந்த நியாய விலைக் கடைக்கான கட்டடம் கட்டப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலானதால், கட்டடம் சிதிலமடைந்துள்ளது. அதை இடித்துவிட்டு, புதிய கட்டடம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது M.L.A. தொகுதி வளர்ச்சி நிதியின் மூலமாக 11 இடங்களில் 60 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயில் நியாய விலைக் கடை கட்டடங்கள் கட்டிக் கொடுத்திருந்தாலும்கூட, எனது தொகுதியில் இன்னும் 12 இடங்களில், குறிப்பாக செங்குன்றாபுரம், செங்கோட்டை, குந்தலப்பட்டி, கருப்பசாமி நகர், முண்டலாபுரம், எம்.புதுப்பட்டி, கவுண்டம்பட்டி, சித்தமநாயக்கன்பட்டி, கோபாலன்பட்டி, ரெங்கபாளையம், மத்திய சேனை, லட்சுமிநாராயணபுரம் ஆகிய இடங்களில் புதிய கட்டடங்கள் தேவைப்படுகின்றன. அந்தப் பகுதி மக்கள் மிகவும் வேண்டிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதையும் நீங்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி ஏழை, எளிய மக்களுக்குப் பொற்கால ஆட்சி என்றால், கூட்டுறவுத் துறைக்கும் இது ஒரு பொற்கால ஆட்சிதான். வரலாற்றில், இதுவரை இல்லாத அளவிற்கு இந்த 4½ ஆண்டுக் காலத்தில் கூட்டுறவுத் துறை அளப்பரிய சாதனைகளைப் புரிந்திருக்கிறது. கூட்டுறவு வங்கிகளுக்கெல்லாம் தேசிய, தனியார் வங்கிகளுக்கு நிகராக புதிய புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இதுவரை இந்திய வரலாற்றில் வேறு எந்தவொரு மாநிலத்திலும் கட்டிக் கொடுக்கப்படாத வகையில், குறுகிய காலத்தில் 3,879 கிடங்குகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். 1,394 நியாய விலைக் கடைகளும், 859 அலுவலகக் கட்டடங்களும் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 47 மத்திய கூட்டுறவு வங்கிகளுக்குக் கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. 122 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறாக, 6,326 புதிய கட்டடங்களை ஏறத்தாழ 588 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். குறு, சிறு விவசாயிகளும் இன்றைக்குப் பயனடைந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், கூட்டுறவுத் துறை மூலமாக மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கைகளை உயர் அலுவலர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய பகுதிகளிலெல்லாம் கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சிதிலமடைந்த கட்டடங்களை மாற்றியமைப்பதற்கு வாய்ப்பு இருந்தால் மாற்றி அமைக்கப்படும். இல்லையென்றால், இந்தச் சங்கங்களுக்கு மராமத்து செய்வதற்கென ஓராண்டுக்கு ரூ.50,000 நிதியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்; அதன் மூலமாக செய்து கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: Positive ஆக பதில் அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. எனது தொகுதியில் தவசிலிங்காபுரம், சூலக்கரைமேடு, கேசெவல்பட்டி, பெத்துலுபட்டி, கட்டனார்பட்டி, பவளக்குறிச்சி மற்றும் விருதுநகர் 24—வது வார்டு ஆகிய 7 இடங்களில் நியாய விலைக் கடைகளைப் பிரித்துத் தர வேண்டி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கிறேன். இதைச் செய்து கொடுத்தால் நன்றியுடன் இருப்பேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் அரசு சட்ட, திட்டங்களுக்குட்பட்டும், கூட்டுறவு விதிகளுக்குட்பட்டும் வரும்பட்சத்தில், உறுதியாக அந்தக் குடும்ப அட்டைகள் பிரித்துக் கொடுக்கப்படும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் எண்ணம். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், தனது ஆட்சியில் எந்த மக்களுக்கும் நியாய விலைக் கடைகள்மூலம் பொருள்களைப் பெறுவதில் எந்தவிதமான சிரமமோ, இடையூறோ இருக்கக்கூடாது; தங்குதடை இருக்கக்கூடாது என்று மாண்புமிகு அம்மா அவர்கள் நினைக்கிறார்கள். எனவே, அதிகமாக கடைகள் இன்றைக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை துறைரீதியாகப் பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.

திரு. எஸ். செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட கிளியூர் ஊராட்சியில் விளாங்குளம், வாழவந்தான்கோட்டை—பெரியார் நகர், பத்தாளைப்பேட்டை ஊராட்சியில் கோட்ரப்பட்டி, பழங்கனாங்குடி ஊராட்சியில் பூலாங்குடி ஆகிய இடங்களில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து

2016 ஜனவரி 21]

2012–2013 ஆம் ஆண்டு கட்டப்பட்ட நியாய விலைக் கடைகள் 4 ஆண்டுகள் கடந்தும் இதுவரையிலும் திறக்கப்படாமல் உள்ளன. இதுகுறித்து கடந்த கூட்டத் தொடரிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவந்திருக்கின்றேன். எனவே, திறக்கப்படாமல் இருக்கின்ற நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருந்தால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் திறக்கப்பட்டிருக்கும் எந்தக் கடையையும், எதற்காகவும் தாமதப்படுத்துவது இல்லை. ஏதேனும் வழக்கு இருக்கும்பட்சத்தில், அந்தமாதிரி இருக்குமேயொழிய, வேறு ஒன்றும் இல்லை. உறுப்பினர் கோரிக்கையை எழுதிக் கொடுப்பாரேயானால், எப்பொழுது கட்டி முடிக்கப்பட்டது என்பது குறித்து உடனடியாகப் பதில் கேட்டு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

திருமண மண்டபம்

***53876 திருமதி. க. அழகுவேலு:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—